# நகரம்



தருமபுரி பாரதிபுரம் சாலையில் விதிகளை மதிக்காமல் இருசக்கர வாகனத்தில் 4 மாணவர்கள் தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்யும் காட்சி.

இண்டூர் அருகே

## கலைநிகழ்ச்சியில் மக்கள் கூட்டத்திற்குள் காரை விட்டு மோதியவரால் பரபரப்பு

### மூதாட்டி காயம்- 2 கார்கள் தீவைத்து எரிப்பு

தருமபுரி, ஆக.10—

தருமபுரி மாவட்டம், இண்டூர் அருகே பள்ளப்பட்டியில் ஒரு கோவில் திருவிழா வெகுவிமர்சையாக நடந்தது. இந்த திருவிழாவின் நிறைவு நாளான நேற்றிரவு கலைநிகழ்ச்சி நடந்தது. இந்த கலைநிகழ்ச்சியை காண ஏராளமான பொதுமக்கள் தரையில் அமர்ந்தும், இருக்கையில் இருந்தும் பார்த்து ரசித்து கொண்டிருந்தனர்.

இதனிடையே அந்த கிராம பகுதி மக்களுக்கும், அதே பகுதியை சேர்ந்த ஒருவருக்கும் கடந்த சில தினங்களாக பிரச்சினை இருந்து வந்தது. இதனால் அந்த நபர் கலைநிகழ்ச்சி நடத்த எதிர்ப்பு தெரிவித்து உள்ளார். இதனால் அவர்களுக்குள் நேற்று தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த அந்த நபர் காரை வேகமாக ஓட்டி கொண்டு நடந்து கொண்டிருந்த கலைநிகழ்ச்சி கூட்டத்திற்குள் மோதினார். இதனால் பொதுமக்கள் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர்.

இதில் முனியம்மாள் (வயது75) என்ற மூதாட்டி காரின் சக்கரம் ஏறியதில் காயமடைந்தார். இதனை பார்த்த அருகில் இருந்தவர்கள் உடனே அவரை மீட்டு சிகிச்சைக்காக தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்த விபத்தால் நிகழ்ச்சிக்காக போடப்பட்டு இருந்த ஏராளமான சேர்கள் உடைந்து சுக்குநூறாக நொறுக்கின.

இந்த நிலையில் அந்த பகுதியில் நின்றிருந்த 2 கார்களை மர்ம நபர்கள் தீ வைத்தனர். இதில் அந்த கார்கள் தீ குபு குபுவென கொளுந்து விட்டு எரிந்தது. இதனை பார்த்த கிராமத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். உடனே தண்ணீரை ஊற்றி போராடி கட்டுக்குள் கொண்டு வந்து தீயை அணைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து இண்டூர் போலீசார் விசாரித்து வருகின்றனர். மக்கள் கூட்டத்துக்குள் காரை விட்டு மோதிய சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



75 – ஆவது சுதந்திர தின விழாவையொட்டி தருமபுரி எஸ்.வி. சாலையில் பா.ஜ.க.வினர் தேசிய கொடியுடன் இருசக்கர வாகனங்களில் பேரணியாக சென்ற போது எடுத்த படம்.



மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட காட்சி.

## செல்போனை கல்வி முன்னேற்றத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்

### மாணவர்களுக்கு பாலக்கோடு டி.எஸ்.பி. அறிவுரை

காரிமங்கலம், ஆக.10—

தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் பள்ளி மாணவர்களுக்கு போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு இன்ஸ்பெக்டர் வெங்கட்ராமன் தலைமை வகித்தார். பள்ளி தாளாளர் மனோகரன் முன்னிலை வகித்தார். பாலக்கோடு டி.எஸ்.பி. சிந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போதைப் பொருட்கள் பயன்படுத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து பேசினார்.

மேலும் மாணவர்கள் போதை பொருட்கள் மற்றும் மதுபானங்களுக்கு அடிமையாகாமல் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றை கடைப்பிடிப்பதன் அவசியம் குறித்தும் ஆண்ட்ராய்டு செல்போனை கல்வி முன்னேற்றத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றனர்.



மகா முனியப்பன்

திரளாக கலந்து கொண்ட பக்தர்களை படத்தில் காணலாம். உள்படம்: சிறப்பு அலங்காரத்தில் மகா முனியப்பன் பக்தர்களுக்கு அருள்பாலித்த காட்சி.

ஊத்தங்கரையில்

## மகா முனியப்பன் கோவில் திருவிழா


### திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்

மத்தூர், ஆக.10—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் 80 ஆண்டு பழமையான ஸ்ரீமகா முனியப்பன் கோவில் திருவிழாவில், ஆயிரக்கணக்கான கோழி, ஆடுகள் பலியிட்டு பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்தினர். செவ்வாய்கிழமை அதிகாலை ஸ்ரீவிநாயகர்,மகாமுனியப்பன் சுவாமிக்கு சிறப்பு அலங்கார அபிஷேக ஆராதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து பக்தர்கள் கரகம் எடுத்தும், வேல் எடுத்தும் தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

இந்த விழா கோவில் தர்மகர்த்தா சிவசக்தி சண்முகம், கொங்கு அறக்கட்டளை தலைவர், கொங்கு அறக்கட்டளை செயலாளர், பொருளாளர் கொங்கு இளைஞரணி தலைவர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கொங்கு இளைஞர்அணி மற்றும் ஸ்ரீமகா முனியப்பன் கொங்கு அறக்கட்டளையினர் செய்திருந்தனர். ஊத்தங்கரை காவல் துணை கண்காணிப்பாளர் அமலஅட்வின் தலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்திபன் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க கோரி

## தருமபுரியில் அறப்போராட்டம்

### ஆயர் தலைமையில் நடந்தது

தருமபுரி, ஆக.10—

தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றக் கோரி கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக கத்தோலிக்க திருச்சபை சார்பில் இன்று (ஆகஸ்டு 10—ந் தேதி) கருப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இன்றுதான் தலித் கிறிஸ்தவர்களின் சமூக பொருளாதார நிலைப்பாடு குறித்து மத்திய அரசால் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா சார்பில் கமிஷன் அமைக்கப்பட்டது. அதில் தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

இதை நிறைவேற்ற வேண்டும் எனக்கோரி இந்த வருடமும் போராட்டம் நடைபெற்றது. தருமபுரியில் ஆயர் லாரன்ஸ் பயஸ் தலைமையில் நடந்த அறப்போராட்டத்தில் தருமபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி என மாவட்டம் முழுவதும் இருந்து 100—க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில பொறுப்பாளர் கோவேந்தன், எஸ்சி.எஸ்டி. கமிஷன் மாவட்ட பொறுப்பு குழு தலைவர் ஏசுதாஸ், பொம்மிடி பங்குகுழு தலைவர் ரமேஷ் உள்பட பலர் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். பின்னர்

ஆயர் லாரன்ஸ் பயஸ் தலைமையிலான குழுவினர் கலெக்டரை சந்தித்து தங்களது கோரிக்கை மனுவை அளித்தனர்.

## 70 வயது நிரம்பியவர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும்

### தருமபுரியில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தினர் வலியுறுத்தல்

தருமபுரி, ஆக.10—

தருமபுரியில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்க கூட்டம் தலைவர் மாணிக்கம் தலைமையில் நடந்தது. சதாசிவம், கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொருளாளர் ஜெயபால் நன்கொடை விபரம், வரவு, செலவு கணக்குகளை வாசித்தார். கூட்டத்தில் மணி, குணசேகரன், முருகன், ராஜம்மாள் உள்பட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 1.1.2022 முதல் 6 மாத நிலுவை தொகையுடன் 3 சதவீதம் அகவிலைப்படி வழங்க வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். 70 வயது நிரம்பியவர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

7—வது ஊதியக் குழுவின் 21 மாத ஊதிய நிலுவையை வழங்க வேண்டும் என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**பத்திரம் காணவில்லை**

நான் கீழ்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது பெயரில் உள்ள ஆவண எண். 872/2013, சர்வே எண்.398 & 402/2, பட்டா எண். 1305 கொண்ட புன்செய் நிலப்பத்திரம் பென்னாகரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட பத்திரம் பழையூர் பேருந்து நிலையத்தில் ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது 22.01.2022 அன்று தொலைந்து விட்டது. இதுகுறித்து 3.5.2022 அன்று காவல்துறையில் ஆன்லைன் புகார் செய்யப்பட்டுள்ளது. (புகார் எண் LDR No. ID587202200172). மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

முகவரி: **லலிதா,** க/பெ. வெங்கடாசலம்
சோமேனஅள்ளி (Vill. & Po.),
இண்டூர், தருமபுரி–636803.
**செல்: 97878 15591**

அ.தி.மு.க. அலுவலக சாவி ஒப்படைப்பு விவகாரம்

## ஓ.பன்னீர்செல்வத்தின் மேல் முறையீட்டு வழக்கு 19-ந்தேதிக்கு முன் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும்

### சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி தகவல்

சென்னை, ஆக. 10—

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் ஜூலை 11—ந்தேதி சென்னை வானகரத்தில் நடைபெற்ற போது ஓ.பன்னீர் செல்வம் ஆதர வாளர்களுக்கும் எடப்பாடி பழனிசாமி ஆதர வாளர்க ளுக்கும் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வைத்து வன்முறை ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து வட்டாட்சியர் அதிமுக தலைமை அலுவலகத்திற்கு சீல் வைத்தார். இதனை தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் தனித்தனியே சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப் பட்டது. இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அ.தி.மு.க தலைமை கழகத்தின் சாவியை எடப்பாடி பழனி சாமி வசம் ஒப்படைக்குமாறு உத்தர விட்டது. இந்நிலையில் ஓ. பன்னீர் செல்வம் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராகவும் வட்டாட்சியர் தலைமைக் கழகத்தின் சாவியை எடப்பாடி பழனிசாமி வசம் ஒப்படைத்ததற்கு எதிராகவும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து இந்த வழக்கில் தங்கள் தரப்பை கேட்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்க கூடாது என வலியுறுத்தும் கேவியட் மனுவை உச்ச நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்யதார்.

இந்நிலையில் ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி முன்பு ஆஜரான மூத்த வழக்கறிஞர் சேகர் நாப்டே, ஓ.பி.எஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை விரைந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் முறையிட்டார்.

அப்போது தலைமை நீதிபதி என்.வி ரமணா, இந்த வழக்கை ஆகஸ்ட் 19ம் தேதிக்கு முன்பாக பட்டியலிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முயற்சிப்பதாக ஓ.பன்னீர்செல்வம் தரப்பு வழக்கறிஞரிடம் தெரிவித்தார்.



தற்கொலை செய்து கொண்ட ரம்யா கணவருடன் திருமணத்தின் போது எடுத்துக் கொண்ட படம்.

கணவருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு

## திருமணமான 2 மாதத்தில் பெண் கவுன்சிலர் தற்கொலை

ஆத்தூர், ஆக.10—

சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகே உள்ள ஆரிய பாளையம் ஊராட்சி மேற்காடு பகுதியை சேர்ந்தவர் நடராஜன். இவரது மகன் வெற்றிவேல் (வயது 29), இவர் ஆத்தூரில் உள்ள ஒரு தனியார் வங்கியில் பணி புரிந்து வ ருகிறார்.

**ஊராட்சி கவுன்சிலர்**

இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த அண்ணாதுரை என்பவரது மகள் ரம்யாவுக்கும் (25) கடந்த ஜூன் மாதம் 13—ந் தேதி திருமணம் நடந்தது. ரம்யா ஆரிய பாளையம் ஊராட்சி 2—வது வார்டு உறுப்பினராக இருந்து வந்தார். தலை ஆடியையொட்டி கடந்த 17—ந் தேதி ரம்யாவை பெற்றோர் தங்களது வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடராஜன் தனது மருமகளை தங்களது வீட்டிற்கு அழைத்து வந்தார். பின்னர் அனைவரும் சாப்பிட்டு விட்டு தூங்க சென்றனர்.

**தற்கொலை**

நள்ளிரவில் அனைவரும் தூங்கிய நேரத்தில் ரம்யா திடீரென தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். அதிகாலையில் கணவர் எழுந்து பார்த்த போது ரம்யா தூக்கில் தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பின்னர் சம்பவம் குறித்து ரம்யாவின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனே அவர்கள் உறவினர்களுடன் அங்கு வந்தனர். பின்னர் ரம்யாவின்உடலை பார்த்த கதறி அழுதனர். இந்த சம்பவம் குறித்து ஏத்தாப்பூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு விரைந்து சென்ற போலீசார் சம்பவம் குறித்து விசாரித்தனர். தொடர்ந்து ரம்யாவின் உடலை மீட்டு சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தினர்.

**கள்ளத்தொடர்பு**

வெற்றிவேலுக்கு திருமணத்திற்கு முன்பே அந்த பகுதியை சேர்ந்த வேறு பெண்ணுடன் கள்ள தொடர்பு இருந்துள்ளது. திருமணத்துக்கு பின்பு தான் இது ரம்யாவுக்கு தெரியவந்தது. அதிர்ச்சி அடைந்த ரம்யா கணவரை கண்டித்தார். பலமுறை கண்டித்தும் வெற்றிவேல் கள்ளத்தொடர்பை கைவிட வில்லை. இதானல் அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டு வந்த நிலையில் மனம் உடைந்த ரம்யா தற்கொலைசெய்து கொண்டது விசாரணையில் தெரிய வந்தது. இதையடுத்து வெற்றி வேல் மீது போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரம்யாவின் உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கிடையே திருமணமாகி 55 நாளில் ரம்யா தற்கொலை செய்து கொண்ட தால்ஆத்தூர் ஆர்.டி.ஓ. சரண்யாவும் அன விசாரணை நடத்துகிறார். விசாரணை முடிவில் வெற்றிவேல் மீது தற்கொலைக்கு தூண்டியதாக வழக்கு பதிவு செய்து கைது செய்யப்படுவார் என்று போலீசார் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
5314/2022

மோகன்ராஜ்,
த/பெ. முனியப்பன் (லேட்),
109/3, மணியாண்டபள்ளி,
குருபரபள்ளி, கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தாத்தா கரிசாதன் என்பவர் கடந்த 22.09.1979 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

**V.PARTHIBAN, B.A., B.L.,**
**Advocate & Notary Public,**
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
5312/2022

மகேந்திரன்,
த/பெ. குட்டிகவுண்டர் (லேட்),
ஜபேதார்மேடு, காவேரிபட்டிணம்,
கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தந்தை குட்டிகவுண்டர் என்பவர் கடந்த 27.7.2010 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

**V.PARTHIBAN, B.A., B.L.,**
**Advocate & Notary Public,**
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
5811/2022

முனியப்பன்,
த/பெ. முனியப்பன் (லேட்),
காமராஜ் நகர், பெத்ததாளப்பள்ளி,
கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர்,
கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தந்தை முனியப்பன் என்பவர் கடந்த 7.5.2016 அன்று மோரமடுகு கிராமம், கிருஷ்ணகிரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

**V.PARTHIBAN, B.A., B.L.,**
**Advocate & Notary Public,**
Krishnagiri-635001



ராயக்கோட்டை மார்க்கெட்டில்

## தக்காளி விலை சரிவால் விவசாயிகள் கவலை

ராயக்கோட்டை, ஆக.10 —

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி சாகுபடி பிரதானமாக நடந்து வருகிறது. ராயக்கோட்டையில் உள்ள மிகப்பெரிய தக்காளி மார்க்கெட் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு தக்காளி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இங்கிருந்து தான் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு தக்காளி ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்தாண்டு இறுதியில் தக்காளி விலை உச்சத்தை தொட்டது.

இந்நிலையில் தற்போது தக்காளி விலை குறைந்து வருகிறது. ராயக்கோட்டை தக்காளி மார்க்கெட்டில் கடந்த 7—ம் தேதி விவசாயிகளிடம் இருந்து 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 160 ரூபாய்க்கு வாங்கப்பட்டது.

நேற்று முன்தினம் அதன் விலை சரிவை சந்தித்து 130 ரூபாய்க்கும், நேற்று 120 ரூபாய்க்கும் விவசாயிகளிடம் இருந்து வாங்கப்பட்டது.

விலை குறைந்து வருவதால் ஒரு கிலோவிற்கு 5 ரூபாய் கூட கிடைக்காமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பறிப்பு கூலி கூட கிடைக்காது என்பதால் பலர் தக்காளியை பறிக்காமல் செடிகளில் விட்டுள்ளனர்.

தொடர் மழை காரணமாக தக்காளி தரமானதாக சாகுபடியாகுவதில்லை. அதை காரணமாக காட்டி விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலைக்கு தக்காளி வாங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஒசூர் பஸ் நிலையத்தில்

## தடைசெய்யப்பட்ட குட்கா வைத்து இருந்த 2 பேர் கைது

### பெட்டிக் கடையில் மறைத்து வைத்து விற்றவரும் கைதானார்

ஓசூர்,ஆக.10—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பஸ் நிலையத்தில் டவுன் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சேலம் பஸ்கள் நிறுத்துமிடத்தில் சந்தேகத்திற்குரிய வகையில் 2 பேர் நின்று இருந்தனர்.

போலீசார் அவர்களை சோதனை செய்தபோது பையில் 27 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகள் வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.10,800 ஆகும்.

விசாரணையில் அவர்கள் தஞ்சை மாவட்டம் அடம்பையில் பெட்டிக்கடை நடத்திவரும் பக்ரூத்தின் (வயது31), புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடியை சேர்ந்த முகமது ரபீக் (53) என்பதும் தெரியவந்தது.

அவர்களிடம் இருந்து குட்கா பொருட்களை பறிமுதல் செய்த போலீசார் இருவரையும் கைது செய்தனர். இதே போல் ஓசூர் நேதாஜி ரோடு ஜங்ஷனில் நாராயண சாத்ரா (42) என்பவர் பெட்டிக்கடை நடத்தி வந்தார். இவரது கடையில் குட்கா பொருட்களை மறைத்து வைத்து விற்பனை செய்வதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, டவுன் போலீசார் அங்கு சென்று சோதனை நடத்தி ரூ.8,791 மதிப்பிலான குட்காவை பறிமுதல் செய்து நாராயண சாத்ராவை கைது செய்தனர்.

**TANEJA AEROSPACE AND AVIATION LIMITED**

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India
Phone : 04347-233508 | Fax : 04347-233414, | E-mail : secretarial@taal.co.in,
Website : www.taal.co.in | CIN : L62200TZ1988PLC014460

**EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDTED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2022**

(Rs. in lakhs, unless otherwise stated)

| Sr. No | Particulars | Quarter ended | | | Year ended |
|---|---|---|---|---|---|
| | | 30-Jun-22 (Un-audited) | 30-Jun-21 (Un-audited) | 31-Mar-22 (Audited) | 31-Mar-22 (Audited) |
| 1 | Total Income from operations (Net) | 639.95 | 622.04 | 791.83 | 3,198.58 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items*) | 337.48 | 232.60 | 296.46 | 1,281.66 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary Items*) | 290.48 | 232.60 | 208.12 | 805.43 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items*) | 183.08 | 198.91 | 59.60 | 546.67 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 183.08 | 198.91 | 44.41 | 531.48 |
| 6 | Equity share capital | 1,246.54 | 1,246.54 | 1,246.54 | 1,246.54 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | 9,301.36 | 9,408.97 | 9,616.90 | 9,616.90 |
| 8 | Earnings Per Share (of Rs. 5/- each) (not annualised): | | | | |
| | (a) Basic earnings / (loss) per share (INR) | 0.73 | 0.80 | 0.24 | 2.19 |
| | (b) Diluted earnings / (loss) per share (INR) | 0.73 | 0.80 | 0.24 | 2.19 |

Notes :

1 Additional information on standalone financial results is as follows:

(INR in lakhs, unless otherwise stated)

| Particulars | Quarter ended | | | Year ended |
|---|---|---|---|---|
| | 30-Jun-22 | 30-Jun-21 | 31-Mar-22 | 31-Mar-22 |
| Revenue from Operations | 616.51 | 597.61 | 773.47 | 3119.72 |
| Profit / (Loss) before tax | 290.48 | 232.60 | 208.12 | 805.43 |
| Profit / (Loss) after tax | 183.08 | 198.91 | 59.60 | 546.67 |

2 The above is an extract of the detailed format of Standalone and Consolidated Quarterly Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Stanalone and Consolidated Financial Results are available on the Stock Exchange website (www.bseindia.com) and also on the Company's website (www.taal.co.in).

3 This statement has been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on August 09, 2022.

For Taneja Aerospace and Aviation Limited
Rakesh Duda
Managing Director

Place : Pune
Date : 09.08.2022